C.C.No.33/2011 09.07.2026

PW2–உமாதேவி (எ) உமா, த/பெ.நெடுஞ்செழியன்

**எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 311கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டு சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்படுகிறது.**

**(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).**

**எதிரி ஆஜர் இல்லை மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.**

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

அ.சா.1 சரஸ்வதி எனது மச்சான் மனைவி என்றால் சரிதான். நெடுஞ்செழியன் எனது கணவர் என்றால் சரிதான். இவ்வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். எனது கணவருக்கு ஏற்பட்ட காயத்திற்கும், இவ்வழக்கின் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். இதற்கு முன்னர் இவ்வழக்கில் நான் சாட்சியம் அளித்தது எனது வீட்டில் இருந்தவர்கள் சொல்லிக்கொடுத்தது என்றால் சரிதான்.